<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.</u>

முன்னிலை திருமதி. K. ஸ்ரீபதி, B.A., L.L.B.,

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் நாள் புதன்கிழமை.

<u>பராமரிப்பு வழக்கு எண்.7/2023.</u>

<u>சி.என்.ஆர். எண். TNTU09-001716-2023</u>

காந்திமதி, வயது-35, க/பெ. முருகேசன்

கொல்லக்கொட்டாய், வாளையாம்பட்டு(கிராமம்)

வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம். ....மனுதாரர்

//எதிராக//

முருகேசன், வயது-38, த/பெ.விஷ்வநாதன்

மேல்குப்பம்(கிராமம்), சின்னபள்ளிகுப்பம்(அஞ்சல்),

வாணியம்பாடி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம். ....எதிர்மனுதாரர்

இவ்வழக்கு 24.03.2023 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 20.02.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.சி.தேவகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.கே.ரஞ்சித்குமார், B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

<u>I. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் மனுவின் சாராம்சம்</u>

1. மனுதாரர் தனது கணவரிடம் இருந்து மாதம் ரூ.20,000/- ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார். 12.02.2012ம் தேதி வளையாம்பட்டு, முருகர் கோவிலில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணச் செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் செய்ததாகவும், இவர்களுக்கு 02.01.2014 அன்று ஜெயஸ்ரீ என்ற பெண் குழந்தை

பிறந்ததாகவும், மேற்படி திருமணத்திற்காக மனுதாரரின் பெற்றோர் வரதட்சணையாக 1 சவரன் தங்க நகை மற்றும் இருசக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ.50,000/-சீர் வரிசைப் பொருட்களான கட்டில், பீரோ, டிவி மற்றும் குழந்தைக்கு 2 சவரன் செயின் ஆகிவை அனைத்தும் எதிர்மனுதாரரிடம் உள்ளதாகவும், ஆனால் எதிர்மனுதாரர் தனது கடமைகளை செய்யாமல், மன உளைச்சல் மற்றும் கொடுமைபடுத்தி வந்ததாகவும், 07.01.2019-ல் மனுதாரர் தாயார் உடல்நிலை காரணமாக தாய் வீட்டிற்கு சென்றதாகவும், அங்கிருந்தே ஜெயஸ்ரீ எம்போசா பள்ளிக்கு சென்று கொண்டிருந்தவரை 24.03.2021ம் தேதி எதிர்மனுதாரர் அழைத்து சென்றுவிட்டதாகவும், எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்காக ரூ.1,00,000/-ம் கேட்டு மனுதாரரின் தகப்பனார் வேறு நபர்களிடம் கடனாக பெற்றுக்கொடுத்ததாகவும், விவசாய செலவுகளுக்காக 05.03.2017ம் தேதி ரூ.15,000/- எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதாகவும், பெண் குழந்தை தாயாரான மனுதாரரரின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்ற சங்கதிகளுக்கு விரோதமாக குழந்தையை தன்னிடம் வைத்துள்ள எதிர்மனுதாரரின் செயல் சட்டத்திற்கு புறம்பானது என்றும், மனுதாரர் சுமுகமாக வாழ எல்லா வகையிலும் விட்டுக்கொடுத்து வாழ்ந்து வந்த நிலையில் எதிர்மனுதாரர் குழந்தைகளையும், மனுதாரரையும் பராமரிக்காமல் பல்வேறு தவறான பழக்க வழக்கங்களுக்கு ஆளாகி இருந்து வருவதாகவும், பிள்ளைக்கும் உரிய உண்ண உணவு, உடுக்க உடை, பராமரிப்பு செலவு, பிள்ளையின் படிப்பு செலவு ஆகிய எதற்கும் எதிர்மனுதாரர் எந்த செலவினமும் செய்யாமல், பிரச்சனைகள் செய்தே வாழ்ந்து வந்ததாகவும், இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதற்கு எதிர்மனுதாரரே காரணம் என்றும் கூறியுள்ளார்.

2. எதிர்மனுதாரர் எதனையும் பொருட்படுத்தாமல் தன் விருப்பம்போல் வாழ்ந்து வருவதால் பிரச்சனை இருந்து வருவதாகவும், பிரச்சனையின் பொழுது எதிர்மனுதாரர் அசிங்கமாக மற்றும் கெட்ட வார்த்தைகளால் மனுதாரரை திட்டி தாக்கியது குறித்தும், குழந்தையை 17.10.2021 தேதியில் கடத்தி சென்றது குறித்தும் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கறிஞர் அறிவிப்பு பரிமாற்றங்களுக்கு பிறகு எதிர்மனுதாரர் சார்பில் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.121/2021 என்ற வழக்கு பதிவாகி அதில் இடைக்கால ஜீவானம்ச மனுவும் மற்றும் பதிலும் தாக்கல் செய்யபட்ட நிலையில் 17.11.2022 தேதி வழக்கை வாபஸ் பெற்று கொண்ட நிலையில்,

எதிர்மனுதாரர் வீணான பிரச்சனைகளை செய்து வருவதாகவும், மனுதாரருக்கு உண்ண உணவு, உடுக்க உடை, மருத்துவ செலவு, போக்குவரத்து செலவு, படிப்பு செலவு மற்றும் பராமரிப்பு செலவு என மாதம் ஒன்றுக்கு தற்பொழுது குறைந்தது ரூபாய்.20,000/-செலவாகிறது என்றும், மேற்படி தொகையை செலுத்த எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் என்றும், எதிர்மனுதாரர் செய்துவரும் பைனான்ஸ் தொழில், விவசாயம் மற்றும் வியாபாரம் ஆகியவைகள் மூலம் தற்பொழுது மாதம் ரூபாய்.50,000/-ம் அளவிற்கு சம்பாத்தியம் ஈட்டி வருவதாகவும், அதே போல் வீடு, மற்றும் ரொக்கம் வைத்து அதிலிருந்தும் தற்பொழுது மாதம் ரூபாய்.20,000/- அளவிற்கு வருமானம் பெற்றுவருவதாகவும், அதனால் மனுதாரருக்கு மாதம் ரூ.20,000-த்தை உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவச் செலவுகளுக்காக ஜீவனாம்சமாக வழங்ககோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

II. எதிர்மனுதாரர் சார்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சாராம்சம்

1. மனுதாரர் தன் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய், சட்டப்படி செல்லாது, மனு நிலைக்கத்தக்கதல்ல, மனு முகாந்திரம் அற்றது. மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் 12.02.2012-ம் தேதியில் வளையாம்பட்டு முருகன் கோவிலில் இந்து குல வழக்கப்படி திருமணம் நடைப்பெற்றது உண்மை என்றும், ஆனால் திருமணத்திற்கான அனைத்து செலவினங்களையும் மனுதாரரின் பெற்றோர்கள் செய்தார்கள் என்பது தவறு என்றும், இருவருக்கும் திருமணத்தின் பயனாக 02.01.2014 தேதியில் ஜெயஸ்ரீ என்ற குழந்தை பிறந்தாகவும், மேலும், எதிர்மனுதாரர் திருமணத்தின்போது எவ்வித வரதட்சணையும் பெறவில்லை என்றும், மேலும், என்னுடைய மகள் என்னுடைய பராமரிப்பில் தான் உள்ளார் என்றும், மனுதாரருக்கு என் மகள் என்ன வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறாள் என்ற எந்த விவரமும் தெரியாது என்றும், ஏனெனில் மனுதாரர் தான் என்னுடைய மகளையும், என்னையும் விட்டு பிரிந்து அவருடைய தாயார் வீட்டில் வாழ்ந்து வருகிறார் என்றும், இன்றைய தேதி வரையிலும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும், எனக்கு விபத்து ஏற்பட்ட போது என்னுடைய சேமிப்பு பணத்தை கொண்டு தான்

சிகிச்சை பெற்றதாகவும், மனுதாரரின் தகப்பனாரிடம் பணம் எதுவும் பெறவில்லை என்றும், நானும் என்னுடைய குடும்பத்தாரும் மனுதாரரை கொடுமை செய்ததாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திலும் அல்லது வாணியம்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும் எவ்வித புகார் மனுவும் மனுதாரர் கொடுக்காமல் பெயரளவில் ஒரு பொய்யான காரணத்தை முன்னிலைப்படுத்தி தொடரப்பட்ட மேற்படி மனு சட்டப்படி செல்லாது தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்றும், மனுதாரர் தான் வேண்டுமென்றே என்னை பிரிந்து அவருடைய தாயார் வீட்டில் வாழ்ந்து வருவதாகவும், மேலும், மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்ந்து வந்த காலத்தில் அனைத்து சவரட்சணைகளையும் நான் தான் செய்து வந்தேன் என்றும், என் பிள்ளையை நான் தான் படிக்க வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

2. மேலும், மனுதாரருக்கு நான் பணம் தராமல் புறக்கணிப்பதாகவும், இது குறித்து பஞ்சாயத்து நடைபெற்றதாகவும், கூறியுள்ள நிலையில் எந்தெந்த தேதியில் பஞ்சாயத்து நடைபெற்றது என்றும், யார் யார் முன்னிலையாகி பஞ்சாயத்து நடத்தினார்கள் என்று எந்த ஒரு தகவல்களையும் மனுதாரர் மனுவில் குறிப்பிடாமல் வெறுமனே பஞ்சாயத்து நடைபெற்றதாக கூறும் அனைத்து சங்கதிகளும் பொய் என்றும், விபத்து நடந்த நாள் முதல் இன்றைய நாள் வரை எந்த ஒரு வேலையும் செய்ய முடியாத அளவிற்கு ஒரு நடைபிணம் போல் தான் வாழ்க்கையை நடத்தி கொண்டு வருவதாகவும், என் உடல்நலத்தின் மீது அக்கறை கொள்ளாமல் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கோடு மனுதாரர் செயல்பட்டு வருவதாகவும், மேலும், மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பம் இருந்தால் இன்றைய தேதியிலேயே சேர்ந்து வாழ எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும், மனுதாரருக்கு ரூ.20,000/- வழங்க கோரும் மனுதாரரின் இந்த மனு எந்த விதமான சட்ட காரணமும் இல்லாமல் தாக்கல் செய்து இருப்பதால் சி றப்பு தொகையுடன் இம்மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்புக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன் என்று எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்து, மனுதாரர்தரப்பில் சான்றாவணங்கள் ம.த.சா.ஆ.1 மற்றும் ம.த.சா.ஆ.2 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் எ.ம.த.சா.1 ஆக சாட்சியம் அளித்தும், அவரது

அம்மா எ.ம.த.சா.2 ஆகவும் சாட்சியம் அளித்து, சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

## III. தீர்வு

தற்போது தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனை யாதெனில்

i) மனுதாரர் சரியான காரணங்களுக்காகத்தான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறாரா?

ii) மனுதாரர் ஜீவனாம்சம் பெற தகுதியுடையவரா? என்பதாகும்.

**i) மனுதாரர் சரியான காரணங்களுக்காகத்தான் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறாரா?**

1. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, எதிர்மனு இருதரப்பு சாட்சிகள், சான்றாவணங்களை பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது என்பதும், அந்த திருமணத்தின் பலனாக எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் ஒரு பெண் குழந்தை உள்ளது என்பது இரு தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

2. ம.சா.1 காந்திமதி அவரது நீதிமன்ற சாட்சியத்தில், இம்மனுவானது எனக்காகவும், குழந்தைக்காகவும் சேர்த்து போடப்பட்டது என்றும், குழந்தை எதிர் மனுதாரரிடம் உள்ளது, எதிர்மனுதாரர் ம.சா.1 உடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றும், இன்றைய தேதி வரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் என்னுடன் வாழ தயாராக இருக்கும் நிலையில் அவருடன் வாழ தயாராக இல்லை என்றும், 2020ம் ஆண்டு பஞ்சாயத்தில் சேர்ந்து வாழ்வதற்காக பஞ்சாயத்து போடப்பட்டது, பஞ்சாயத்துதாரர்கள் சேர்ந்து வாழும் படி சொல்லிய பின்பும் நான் தான் சேர்ந்து வாழவில்லை என்றும், என் தந்தைக்கு சொத்து உள்ளது என்றும், சேர்ந்து வாழ்வதற்கான மனு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் சேர்ந்து வாழ விருப்பம் என நான் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த

வழக்கிலும் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு மனு தாக்கல் செய்திருந்தேன் என்றும், அந்த வழக்கு விவரம் தற்போது வரை எனக்கு தெரியாது என்றும், திருமணம் ஆன 10 நாட்களுக்குள் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு, எதிர்மனுதாரருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் அதனுடைய தாக்கம் இன்னால் வரை இருந்து வருகிறது என்றும், எனக்கு எதுவும் வாங்கி தராமல் பெற்றோரிடமே வாங்கி வர சொல்லி கொடுமை செய்தார் என்றும், நான் உழவர் சந்தைக்கு காய்கறி விற்பனைக்கு சென்று வருகிறேன் என்றால் சரியல்ல, தேங்காய் வெட்டும்போது அந்த தேங்காய் விற்று வருவதற்காக மட்டும் சென்று வருவேன் என்றும், எதிர்மனுதாரர் விவசாயம் செய்கிறார், மேஸ்திரி வேலைக்கு செல்வார் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்கிறார், பைனான்ஸ் கம்பெனியின் பெயர் தெரியாது என சாட்சியமளித்துள்ளதாலும், எதிர்மனுதாரரின் பேரில் நிலம் உள்ளதா என்றால் அவரது பெற்றோரின் பேரில் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

3. எ.ம.சா.1 முருகேசன் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் குழந்தை தற்போது என்னிடம் உள்ளது என்றும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே பிரச்சனை சம்மந்தமாக பேச்சுவார்த்தை ஆறு முதல் ஏழு வரை நடந்திருக்கும் என்றும், குழந்தை பிரச்சனை சம்மந்தமாக மனுதாரர் கொடுத்த புகாரின்பேரில் காவல்நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள் என்றும், நான் எனது முதன்மை விசாரணையிலும், எதிர்மனுவிலும் மனுதாரர் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்று கூறியிருந்தால் அது தவறு என்றும், எனது குழந்தைக்கு மாதம் எவ்வளவு செலவாகும் என்றால் மாதம் ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் செலவாகும், அதற்கு வருமானம் எப்படி எனக்கு வருகிறது என்றால் ஏரி வேலைக்கும், கூலி வேலைக்கும் செல்வதால் வருகிறது என்றும், எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எனக்கு இல்லை, எனது அப்பாவிற்கு உள்ளது என்றும், எனக்கு உடல்நிலை சரியில்லாதது சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4. எ.ம.சா.2 அம்சா அவரது நீதிமன்ற சாட்சியத்தில் என் மகனுக்கும், மருமகளுக்கும் வளையாம்பட்டு முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது என்றும், அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளை என்றும், என் மகனுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 1

ஏக்கர் நிலம் உள்ளது, 2 வீட்டு மனை உள்ளதா என்றால் 1 வீட்டு மனை உள்ளது என்றும், என் மகனுக்கு 1 ஏக்கர் நிலம் உள்ளதால் நிலம் மூலமாகவும், மேஸ்திரி வேலை மூலமாகவும் மாதம் ரூ.25,000/- சம்பாதிப்பாரா என்றால் சரிதான் என்றும், கணவன் என்பவர் மனைவியை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றும், அதனால் என் மகன் என் மருமகளுக்கு மாத ஜீவனாம்சம் தர கடைமைப்பட்டவர் என்றால் சரியல்ல என்றும், முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனது மகன் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும், நானும், எனது கணவரும் தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றும், மனுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்றும், முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என முன்னக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் மனுதாரர் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் வாழ தயாராக இருக்கும் நிலையில் அவருடன் வாழ மனுதாரர் தான் தயாராக இல்லை என்றும், கொடுமை செய்ததற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. **எனவே, பலமுறை பஞ்சாயத்து பேசப்பட்டும் மனுதாரர் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்பதாலும், மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்வதற்கு சரியான காரணங்களை கூறவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.**

**ii) மனுதாரர் ஜீவனாம்சம் பெற தகுதியுடையவரா?**

1. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் மகள் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் தான் இருப்பது தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரர் அவருக்கு உடல்நிலை சரியில்லாதது சம்மந்தமாக மருத்துவ சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றபோதிலும், எதிர்மனுதாரருக்கு உடல்நலத்தில் பிரச்சனை இருப்பது மனுதாரர் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது தெரியவருகிறது. மேலும், மனுதாரர் எதிர்மனுதாரர் விவசாயம் செய்வதாக கூறியுள்ள நிலையில் நிலம் எதிர்மனுதாரரின் பெற்றோரின் பெயரில் தான் உள்ளது என்றும், பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார் என கூறியுள்ள நிலையில் பைனான்ஸ் கம்பெனியின் பெயர் தெரியாது என சாட்சியமளித்துள்ளார். மேலும், மனுதாரர் அவரது சாட்சியத்தில் தேங்காய்

வெட்டும்போது அந்த தேங்காய் விற்று வருவதற்காக மட்டும் சென்று வருவேன் என்றும், என் தந்தைக்கு சொத்து உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், எதிர்மனுதாரர் தனது குழந்தைக்கு மாதம் எவ்வளவு செலவாகும் என்றால் மாதம் ஐந்தாயிரம் அல்லது ஆறாயிரம் செலவாகும், அதற்கு வருமானம் எப்படி எனக்கு வருகிறது என்றால் ஏரி வேலைக்கும், கூலி வேலைக்கும் செல்வதால் வருகிறது என சாட்சியம் அளித்துள்ளார். மேலும், எ.ம.சா.2 அம்சா அவரது சாட்சியத்தில் முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனது மகன் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும், மனுவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

2. **குவிமுச 125(1)(4) பிரிவானது ஒரு மனைவி போதுமான காரணமின்றித் தன் கணவனுடன் வாழ மறுத்தால் இந்தப் பிரிவின் கீழ், ஜீவனாம்சம் அல்லது இடைக்கால ஜீவனாம்சம் மற்றும் வழக்குச் செலவுகளுக்காக, சூழ்நிலைக்கு ஏற்ப, தன் கணவனிடமிருந்து உதவித்தொகை பெற அவருக்கு உரிமை இல்லை என்று கூறுகிறது.** எனவே, மனுதாரர் தான் பல முறை பஞ்சாயத்து பேசப்பட்டும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமின்றி பிரிந்து வாழ்ந்து வருவதாக மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாலும், எதிர்மனுதாரருக்கு மனுதாரருடன் சேர்ந்து வாழ எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதாலும், மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்வதற்கு சரியான காரணங்கள் கூறப்படவில்லை என்பதாலும், எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் மனுதாரரை கொடுமைபடுத்தியதாக கூறப்பட்டுள்ள நிலையில் என்ன கொடுமை செய்தார்கள் என்பது பற்றி கூறவில்லை என்பதாலும், குழந்தை எதிர்மனுதாரரின் பராமரிப்பில் தான் இருந்துவருவதாலும் மனுதாரருக்கு இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனு அனுமதிக்கத்தக்கல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3. **முடிவாக,** எனவே மேற்கண்ட காரணங்களுக்காக மனுதாரரின் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. வழக்கில் சங்கதிகள் மற்றும்

சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு செலவுத் தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் 2026 ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாளாகிய இன்று, இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு பின் அவையறிய பகரப்பட்டது.

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

பிற்சேர்க்கை

மனுதாரர் தரப்பு சாட்சி

| | | |
|---|---|---|
| 1. | ம.சா.1 | திருமதி. காந்திமதி |

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | 19.10.2021ம் தேதியிட்ட மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவல நகல். |
| 2. | ம.த.சா.ஆ.2 | 16.11.2022ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த HMOP. 121/2021 மனுவிற்கு தாக்கல் செய்த எதிர்மனு உரை. |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| 1. | எ.சா.1 | திரு. முருகேசன் |
| 2. | எ.சா.2 | திருமதி. அம்சா |

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.